விலை: சதம் 75 ★ ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 கார்த்திகை 4 முஹரம் 21 இதழ் 277
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 19-11-81


## "எமக்கு அரசும், படையும் இருந்தாலே பாதுகாப்பு உண்டு" - பண்டிதர் இரத்தினம்

(கொழும்பு)

"எமக்குப் பாதுகாப்பு இல்லை எந்த நேரத்தில் என்ன நடக்குமோ என்று தமிழ்மக்கள் அஞ்சிக்கொண்டிருக்கின்றனர்; எமக்கென்று அரசும் படையும் இருந்தாலே எமக்கு பாதுகாப்பு இருக்கும்."

இவ்வாறு ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் நேற்று பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

"இந்த நாட்டில் ஒற்றுமை சமாதானம் தேவை. இந்த முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். தமிழ் மக்கள் திருப்தி கொள்ளும்வகையில் அரசியல் தீர்வு காணப்படவேண்டும்" என்று தெரிவித்த பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேலும் கூறியதாவது:

புதிய அரசியல் அமைப்பு தோற்றுவிக்கப்பட்ட காலத்தில் நான் பல விபரங்களைக் கூறினேன். அவை சரியாக இன்று வந்துவிட்டது.

"புலிபுலி என்றால் ஒருகாலத்தில் புலி வந்தே தீரும் என்று அன்று கூறினேன். அப்போது புலி இல்லை இன்று புலி வந்துவிட்டது.

"சமஷ்டி அமைப்பு சரிவராவிட்டால் பிரிவினை தலைதூக்கும் என்றேன். பிரிவினைக் கோரிக்கை இன்று வந்துவிட்டது.

"இலங்கை ஒரு அயர்லாந்தாகமாறும் என்று 72ல் கூறினேன் இன்று இது உண்மையாகிவிட்டது.

"இந்த அரசாங்ககாலத்திலே பயங்கரவாதம் தோன்றவில்லை. பயங்கரவாதத்துக்கு கடந்த அரசே காரணம்" என்று பண்டிதர் இரத்தினம் கூறினார். (ம)

# சர்வதேச மன்னிப்பு சபையினர் யாழ். விஜயம்!

[யாழ்ப்பாணம்]

சர்வதேச மன்னிப்புச்சபையைச் சேர்ந்த நான்கு பிரதிநிதிகள் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வந்து; பல இடங்களிலும் சேதமடைந்த கட்டடங்களைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்டவர்களையும் நேரில் சந்தித்து விபரம் அறிந்து கொண்டார்கள்.

சர்வதேச மன்னிப்புச்சபை பிரதிநிதிகள், யாழ் முதல்வர் திரு. இராஜா விசுவநாதனைச் சந்தித்து விபரம் அறிந்து கொண்டனர்.

யாழ் முதல்வருடன், எரிந்த பழைய மார்க்கட், யாழ் நூல்நிலையம் மற்றும் கட்டிடங்களையும் பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

யாழ் பெரியாஸ்பத்திரிக்கு சென்று வன்முறைச்சம்பவத்தில் காயமடைந்தவர்களை சந்தித்து உரையாடினார்கள்.

யாழ் முதல்வர், பிரதிநிதிகளிடம், யாழ் பொதுசன நூலகத்திற்கு நிதியுதவி வழங்குமாறு கோரியபோது, திருப்பவும் கட்டடங்கள் எரிந்தால் என்ன பரிகாரம்? என்று பிரதிநிதிகள் கேட்டனர். இதற்கு முதல்வர் எங்கள் காரியங்களைப் பார்ப்பதற்கு எங்களை பொறுப்பில் விட்டால் அவற்றைப் பாதுகாக்கும் நிலை ஏற்படும்" என்றார்.

இவற்றை பிரதிநிதிகள் மிகுந்த அனுதாபத்துடன் செவிமடுத்தார்கள். (மா-த)

## 'எம். டி. எச். தொடுத்த 'நிர்வாண பாணம்

(கொழும்பு)

வரவுசெலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கடுவெல எம். பி. திரு. எம். டி. எச். ஜெயவர்த்தனநேற்றுபாராளுமன்றத்தில் பேசுகையில்; நிதியமைச்சர் திரு. ரொனி டி. மெல்மீது நேரடிக் 'கணைகளைத்' தொடுத்திருந்தார்.

"கொழும்பு விட்டன்ஸ் ரெறஸில், நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல்லுக்கு சிலை ஒன்று வைக்கப்பட்டிருக்கும். அந்தச் சிலையின் கீழ், "சொர்க்கத்திற்குச் சென்றுகொண்டிருக்கும் வழியில் பஹமஸில் காலமான திரு. ரொனி நினைவாக பீடி ஒப்பந்தகாரர்களினால் நிறுவப்பட்ட சிலை" என்று எழுதப்பட்டிருக்கும்.

(குறிப்பு: பஹமஸ் மாநிலத்தில் வரிகள் அறவிடப்படுவதில்லை).

மேற்படி கூறிய திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன அமைச்சர் திரு ரொனி டி மெல் மீது மேலும் ஒரு 'பாணத்தைத்' தொடுத்தார்.

"ஐ. தே. கட்சியில் நான் ஒரு சிரேஷ்ட அங்கத்தவன் எதிர்க்கட்சியில் மட்டும் நான் இருந்தால் நிதி அமைச்சர் திரு. ரொனியின் ஒவ்வொரு இறக்கையையும் பிடுங்கி நிர்வாணமாக்குவேன் என்று திரு. ஜெயவர்த்தன கூறினார். (ம)

## பொலிஸ் விசாரணை விபரம்: நீதிபதி கோருகிறார்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை திருட்டுப் பொருட்கள் மீட்கப்பட்டது தொடர்பான பொலிசாரின் விசாரணை விபரங்களை மல்லாகம் நீதிபதி கோரியுள்ளார் அவற்றை இன்று வியாழக்கிழமை தம்முன் சமர்ப்பிக்குமாறு அவர் யாழ் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்ட அபிவிருத்திப் பிரிவிலிருந்து 28 ஆயிரம் ரூபா பெறுமதியான பைப்புகள் திருடப்பப்பட்டது தொடர்பாக யாழ், பொலிசார் விசாரணை செய்து ஒரு பகுதி பைப்புகளை மீட்டதுடன் சில நபர்களையும் கைது செய்திருந்தனர்.

இவர்களில் குலசேகரம், சந்திரபோஸ், வேலுப்பிள்ளை சந்திரன், அவராம்பிள்ளை மரியாம்பிள்ளை ஆகிய மூவரை நேற்று முன்தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த காங்கேசன்துறைப் பொலிசார் இதுவரை 23 ஆயிரம் ரூபா பெறுமதியான பைப்புகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

3ஆவது சந்தேக நபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் இச்சம்பவத்தில் பொலிசார் நடந்து கொண்ட விதம் குறித்து சந்தேகம் எழுப்பினார்.

மேற்படி திருட்டுக்குறித்து பலர் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ளனர். யாழ் நகரில் திருட்டு பொருட்களை வைத்திருந்த கடைக்காரர்கள் கைதாகியிருந்தனர். காங்கேசன்துறையில் திருட்டு

(6-ம் பக்கம் பார்க்க)

## "புலியைவிட்டு புலியின் வாலைக்கூட..."

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் நேற்று 'புலி'யின் பெயர் பலமாக அடிபட்டது.

கடுவெல எம். பி. திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன பட்ஜட் விவாதத்தில் நேற்று பேசுகையில்; நிதி அமைச்சர் கொடுத்தசில பட்ஜட் புள்ளி விபரங்கள் சரியாக இல்லை" என்று கூறி "புலி ஒழிப்புக்குப் பொறுப்பான அமைச்சுக்கு ஒதுக்கப்படும் நிதி, ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே செல்கிறதே தவிர புலிகளைப் பிடிக்கமுடியவில்லை. இவர்கள் எத்தனை புலிகளைப் பிடித்துவிட்டார்கள்" என்று தெரிவித்தபோது சபாநாயகர் ஜனாப் பாக்கீர் மாக்கார் சிரித்துக்கேண்டே

"புலியை மட்டுமல்ல; புலியின் வாலைக்கூட அவர்களால் பிடிக்க முடியவில்லையே .." என்றார். (ம)

## கணவன் - மனைவி படுகொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நீண்டகாலமாக வசித்துவந்த மலையக குடும்பத்திலுள்ள 10 பிள்ளைகளின் பெற்றோர் துப்பாக்கிச் சூட்டுக்கு நேற்று முன்தினம் பலியானார்கள் இச்சம்பவம் தொடர்பாக 3 சந்தேக நபர்களைப் பொலிசார் தேடி வருகின்றனர்.

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள ஆரயம்பதியைச் சேர்ந்த கந்தப்பர் சிவகாரம் (70 வயது) தங்கம்மணி (55 வயது) ஆகியோரே பலியானவர்களாவர்.

மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. சுந்தரலிங்கம் மரண விசாரணை செய்தார். சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பஞ்சலிங்கம் பிரேத பரிசோதனை நடத்தினார்.

சந்தேகநபர்களான மயில்வாகன செல்வம் (20 வயது) மயில்வாகனம் ராமச்சந்திரன் (25 வயது) க. வடிவேல் (22 வயது) ஆகியோரை மட்டக்களப்பு தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் கதிர்காமநாதன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி தேடிவருகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஒருவர் சந்தேகநபர்களுக்கு எதிரான வழக்கொன்றில் சாட்சியமளிக்கவிருந்தார், எனக் கூறப்படுகிறது.

மரணவிசாரணை நடைபெற்றபின் நீதவான் கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## "விலைகளில் மட்டுமின்றி தரத்திலும் கவனம் தேவை" - யாழ். மாவட்ட அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

"பொது மக்களின் நன்மை கருதித்தான் பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது" என்று யாழ் மாவட்ட அமைச்சர் திரு யு. பி. விஜயக்கோன் யாழ் மாவட்ட பாவனையாளர் சங்க சம்மேளனத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு விஜயக்கோன் மேலும் பேசுகையில் பொருட்களின் விலைகளில் மாத்திரம் கவனம் செலுத்தாது அப்பொருட்கள் தரமானதா என்பதையும் உறுப்பினர்களாகிய நீங்கள் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்

உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை சிறந்த முறையில் செய்வதால் ஒரு உன்னத சமுதாயத்தை அமைக்க முயற்சிக்கிறீர்கள் என்றும் திரு விஜயக்கோன் குறிப்பிட்டார்.

உள்நாட்டு வியாபார இலாகா ஆணையாளர் திரு அமரசிங்க தலைமையில் யாழ் செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ் மாவட்டத்திலுள்ள 16 உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுமிருந்தும், பாவனையாளர் பாதுகாப்புச் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (மா)

## பாராளுமன்ற பகிஷ்கரிப்பு: கூட்டணிக்கு, ரூ1,50,000 நஷ்டம்!

(கொழும்பு)

கடந்த 19 கிழமைகளாக பாராளுமன்றத்தைப் பகிஷ்கரித்த காரணத்தினால் ஒன்றரை லட்சம் ரூபா அலவன்ஸை தமிழர் விடுதலைக்கூட்டணியினர் இழந்துள்ளனர்.

இக்காலங்களில் பாராளுமன்றத்திற்குச் சென்ற ஏனைய எம். பிக்கள் 3,000 ரூபாவுக்கான காசோலையை சராசரியாகப்

(6ம் பக்கம் பார்க்க)


## மீண்டும் ஆரம்பம்!

நொதேண் ஸ்போட்ஸ் கழகம்

(அங்கத்தவர்கள் மட்டும்)

யாழ் ஆஸ்பத்திரி வீதி 160ம் இலக்கத்தில் இயங்கிவந்த நொதேண் ஸ்போட்ஸ் கழகம் புதிய திருத்தங்களுடன் 21-11-81 சனிக்கிழமை காலை 10 மணிக்கு "நாடோடி மன்னன்" டெலிவிஷன் படக்காட்சியுடன் மீண்டும் மங்களகரமாக ஆரம்பித்துவைக்கப்படவிருக்கிறது.

தலைவர்

1500

மணிவாக்கு

இறைவனின் இன்னருளைப்பெறுவதற்கு ஏற்ற எளிய இனியவழி மன்னுயிர்க்குத் தொண்டுபுரிதல் ஒன்றே.

— சுவாமி விவேகானந்தர்

# நமது நோக்கு

## கம்மியூனிஸ்ட் கிரிக்கட்

சுமார் ஐம்பது வருடங்களுக்குமுன் தம்முடைய நிகரற்ற கிரிக்கட் ஆட்டத்தால் ஆங்கில மக்களை அதிசய வெள்ளத்தில் ஆழ்த்தியவர் ஒரு இந்திய வீரர் றஞ்சித்சிங்.

அவருடைய அளப்பரிய பெருமையை வர்ணித்த அன்றைய ஆங்கில பிரபல எழுத்தாளர் ஏ. ஜீ கார்டினர் "ஆங்கிலேயரின் சொந்த விளையாட்டை ஒரு இந்தியர் எவ்வித திறம்பட விளையாடுகிறார்! இவர் நவநகர் என்ற ஒரு சிற்றூரின் அரசன்; ஆனால் கிரிக்கட் என்ற மாபெரும் விளையாட்டின் சக்கரவர்த்தி'' என்றார்.

ஆங்கில ஆட்சிமறைந்தாலும், அவர்கள் ஆண்ட நாடுகளில் கிரிக்கட்டும் ஷேக்ஸ்பியரும் மறையமாட்டாதென்று பலபெரியோர் பிரார்த்தித்தனர்.

இவ்விருப்புக்கமைய இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் போன்ற ஆசிய நாடுகளிலும், அவுஸ்திரேலியாக் கண்டத்திலும் ஷேக்ஸ்பியருக்கு ஆபத்திருந்தாலும் கிரிக்கட் நன்றாக வளர்ச்சியடைந்துவருகின்றது.

கிரிக்கட் ஒரு கனவான்களின் விளையாட்டு என்று கருதப்படுகிறது. இதற்கு இரண்டு கருத்துக்கள் வழங்கலாம் ஒன்று சாதாரண ஏழை மக்கள் விளையாட முடியாதளவிற்கு விலையுயர்ந்த ஆடம்பர விளையாட்டு இது. மற்றது; அதை விளையாடுபவர்கள், நியாயம், நீதி, நேர்மை, ஆண்மை சகிப்புத்தன்மை போன்ற நற்குணங்களை விருத்தி செய்ய இந்த விளையாட்டு நற்பயிற்சி அளிப்பதென்பதே!

இகற்கு நேர்மாறாக இதனை இகழ்ந்துரைக்கும் செய்பவர்களின் தலைமை பேட்டிராண்ட்ரசெல். பேர்னாட்ஷா போன்ற ஆங்கில அறிஞர்களேச்சாரும்.

பதினொரு காற்சட்டை ஷேட் போன்ற உயருடை அணிந்த மடையர் ஒரு பந்தை நாட்கணக்கில் அடிக்க இன்னொரு பதினொருமடையர் அதைத் தடுக்க பல்லாயிரக்கணக்கான பேதையர் மணித்தியாலக்கணக்கில் பார்த்து பரவசமடைகிறாரே!

இப்படிக்கண்டிக்கப்பட்ட விளையாட்டை முதலாளித்துவ அமெரிக்காவோ ஐரோப்பிய நாடுகளோ சோவியத் ரஷ்யாவோ மற்றைய கம்யூனிஸ்ட் நாடுகளோ விளையாட விரும்பவில்லை.

காரணம்: கனவான்கள் விளையாட்டு கம்யூனிஸ்ட் சித்தாந்தத்துக்கு முரணானதா? இருக்கலாம்: ஆங்கிலேயரில் உள்ள துவேஷம்? இருக்கலாம். பொன்னும் பொழுதும் களியாட்டத்துக்கு விரயம் செய்யப்படுகிறது ஒருகாரணமாகவிருக்கலாம்.

அது எவ்வாறாயினும் இன்று கிரிக்கட்சரித்திரத்தில் இரண்டு சாதனைகள் குறிப்பிடக்கூடியவை. ஒன்று: எங்கள் சிறிய தீவு கிரிக்கட்டில் சர்வதேச கிரிக்கட் சங்கத்தில் அங்கத்துவம் பெற்று 'டெஸ்ட்' ஆட்டங்களில் பங்குபற்றும் உரிமை பெற்றுவிட்டது. இரண்டு: கம்மியூனிஸ்ட் சீனா கிரிக்கட்டில் தீவிரமாக இறங்கியுள்ளது, உலகில் மிகப் பழமையான நாகரிகமுடைய இப்பெருந்தேசம் இன்று தான் இந்தக் 'கனவான்கள் விளையாட்டில்' மோகங்கொண்டுள்ளது.

இதன் விளைவு 'சர்வதேச கிரிக்கட் சம்மேளனத்தின் மாநாடு சீனாவிலேயே நடைபெறுகின்றது. அதுவும் இலங்கையின் தலைமையில்! அத்துடன் சர்வதேச கிரிக்கட் போட்டி விளையாட்டும் சீனாவிலே நடைபெறுகின்றது.

அரசியல் சித்தாந்தத்திற்கும் மக்கள் விளையாட்டுக்கும் எவ்விததொடர்புமில்லை என்ற கருத்தை (சாட்டை) வைத்து முன்னைநாள் அமெரிக்க ஜனாதிபதி திரு. நிக்ஸன் நவசீனத்தின் சிற்பியாகிய மாசேதுங் அவர்களை 'பிங்பொங்' என்ற விளையாட்டுமூலம் அணுகினார்.

அமெரிக்காவும் சீனாவும் இன்று நட்புறவு கொண்டாடுவதும், சீனா பலமேலைத்தேச நாகரிக சாதனங்களில் மோகம் கொண்டிருப்பதும் எதனைக் குறிக்கிறதெனக்கூறுவது கடினம்.

அரசியல் சதுரங்கத்தில் இவ்விதமாற்றங்கள் புதியனவல்ல. சோவியத் ரஷ்யா எதனைக் கண்டிக்கின்றதோ அதனை சீனாவும் அமெரிக்காவும் ஆதரிக்க முன்வருவது கண்கூடு

ஆனால் முதலாளித்துவ-கம்யூனிஸ்ட் கூட்டுறவு நீர் மேல் எழுத்தென்று கொள்ள என்றும் இடமுண்டு.

இருந்தும் எந்தநாடு எதனைச் சாதித்து வெற்றிகாண முடிகின்றதோ அதனை சீன மக்கள் அதற்கு பல மடங்கு திறமையுடன் செய்துமுடிக்கும் வல்லமை பெற்றவர்.

கிரிக்கட் அபிமானிகளுக்கு ஒரு புதியயுகம் தொடங்குகின்றதா? மக்கள் விளையாட்டாக மலருமா?

## புதிய ஆங்கில நாளேடு

நான்கு வாரங்களாக வாரவெளியீடாகத் தோன்றிய "தி ஐலண்ட்'' என்ற புதிய ஆங்கிலப்பத்திரிகை இவ்வாரம் தொடக்கம் தினசரியாக வெளிவருவது நாட்டின் பத்திரிகை உலகில் மட்டுமல்ல அரசியல் வட்டாரங்களிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

யாரை ஆக்க, யாரை அழிக்க, அரசுக்கு மாறு அல்லது சார்பா என்பதை வாசகர்கள் நுணுக்கமாக ஆராய்கின்றனர்; அவர்களின் ஆராய்ச்சி தோல்வியடைவதாக பத்திரிகைச் சுதாதீனத்தைப்பேண ஒரு ஆங்கிலத்தினசரி அவசியம். அத்தேவையை எப்பக்கமும் சாராமல் குறைகளைக் கடிந்து நிறைகளைப் பாராட்டி, ஆக்கபூர்வமான சேவையில் ஈடுபட வேண்டுமென நாம்வாழ்த்துகின்றோம்.

சடுதியாகத் தோன்றிய இத்தாரகை வால்வெள்ளி போல் மறைந்து விடாமல் வாழ்வதற்கு பத்திரிகா நேர்மையே ஒரு வழியென நம்புகின்றோம்.

# இந்துசமய நடவடிக்கைகளுக்கு யாழ்ப்பாணத்தில் கட்டிடம்

## உலக இந்துமகாசபைக்கிளை அமைப்பு வைபவத்தில் தகவல்

(புலோலி)

"நாடுபல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடைவதற்கு மக்கள் மத்தியில் சமய உணர்வும் கட்டுக்கோப்பும் முக்கியமாகின்றன, ஒவ்வொருவரும் தத்தம்துசமயவழி நின்றொழுகி சமய வாழ்க்கை வாழவேண்டும். சமயத்தின்பேரால் எதுவித வேற்றுமைகளுக்கும் இடமளிக்கக்கூடாது.

இவ்வாறு கிளிநொச்சியில் நடைபெற்ற உலக இந்து மகா சபைக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து உரையாற்றிய இலங்கை உலக இந்து மகா சபைத் தலைவர் திரு. யோகேந்திரா துரைசுவாமி குறிப்பிட்டார். நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தம்பிரான் சுவாமிகளின் ஆசியுரையுடன் கிளிநொச்சிக் கந்தசுவாமி கோவிலில் நடைபெற்ற இவ்அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து உரையாற்றிய திரு. யோகேந்திரா துரைசுவாமி தொடர்ந்து குறிப்பிட்டதாவது:

''உலகெங்கும் பரந்து வாழ்கின்ற இந்துக்களை ஒன்றிணைப்பதன் மூலம் இந்துக்கள் பல்வேறு துறைகளிலும் கட்டுக்கோப்பாக உயர்வடையமுடியும். இதனடிப்படையிலே தான் சகலபகுதிகளிலும் விஸ்வஹிந்து பரிஷத்தின் கிளைகள் நிறுவப்பட்டுவருகின்றன.

"இந்துக்களின் சமய சமுதாய நடவடிக்கைகளுக்கென இக்குவசதியான இடஅமைப்பு இதுவரை இருக்கவில்லை. உலக நாடுகளிலிருந்து இந்தசமயக் கொண்டாட்டங்களுக்கென வருவோர் தங்கும் விடுதியோ கூட்டம்கூடும் மண்டபமோ அலுவலகமோ இருக்கவில்லை. இக்குறைபாடுகளை நீக்கி இவ்வசதிகளை உள்ளடக்கிய கட்டிடமொன்றை யாழ்ப்பாணத்தில் திராவிட சிற்பமுறையில் கட்டவிருக்கின்றோம். இக்கட்டிடத்தை அமைப்பதற்கு இந்நாட்டில் உள்ள இந்துக்கள் ஒவ்வொருவரும் தமது பங்களிப்பைச் செலுத்த வேண்டும்''

வடமாராட்சி விஸ்வஹிந்து பரிஷத் தலைவர் நீதவான் திரு கே. எஸ். மகேசன் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

''இன்று ஆன்மீகத்திற்கு பெரும் சோதனை ஏற்பட்டுள்ளது. இந்துக்களின் கலாச்சார வாழ்க்கை முறைகளை நாம் பாதுகாத்து வளர்ப்பதற்கு ஆன்மிகச் சக்தியைப் பெருக்கவேண்டுவது முக்கியமாகும் இதற்கு ஆலய வழிபாடு மிக முக்கியம்.

''ஆலய வழிபாட்டை நாம் சாதி, பேதமின்றி ஆன்மாக்கள் என்ற அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். கூட்டு வழிபாட்டிற்குத் தடையாகவுள்ள தீண்டாமை சாதிப்பிரச்னை ஆலய பிரவேசத் தடை ஆகிய குறைபாடுகள் களையப்பட வேண்டும்.

இந்து மதத்தின் பேரால் நீண்டகாலமாக இருந்துவரும் இக்குறைபாடுகளைக் களைவதற்கு இந்த இந்து மகாசபையின் கீழ் இந்துக்கள் ஒன்றுபடவேண்டும்'''

திரு. ப. கதிரவேலு திரு. இ. சபாலிங்கம் திரு. எம். யோகலிங்கம் தொழிலதிபர் கனகராசா சட்டத்தரணி விஜயராணி மகாதேவா ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர்கள்.

(அ)

# வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் கவனத்திற்கு




கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம் - 'பரீட்சை சச்சபை' நடாத்தும் ஆண்டிறுதிப் பரீட்சை சம்பந்தமான ஒழுங்குகளைப்பற்றிய யாழ். மாவட்ட ஆசிரிய சமுதாயத்தின் குறைகளைக் கல்விப்பணிப்பாளர் கவனத்திற்குத் தருகின்றோம்.

1. கல்விப்பணிப்பாளரின் ச/ஈ/1981 அ 7 என்று இலக்கமிடப்பட்டுள்ள பரீட்சை நேர சூசியில் உள்ள ஒழுங்கீனங்களைக் கல்விப்பணிப்பாளர் கவனத்துக்குத் தருகிறோம்.

(அ) 28-11-81 சனிக்கிழமையும் 5-12-81 சனிக்கிழமையும் 'விஞ்ஞான பாடம்' காலை 8-30 வரை நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

(ஆ) 8-12-81 வியாழக்கிழமை காலை 8-30 தொடக்கம் 11-30 வரை நேரம் கட்டும் 'தொழிற்கல்வி'ப்பாடம் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் உரிமைகளைப்பறிக்கும் நோக்கத்துடனா இவ்வபறு நேர சூசி தரப்பட்டது? இரண்டு சனிக்கிழமைகளும் பாடசாலை அல்லாத நாட்களில் அதுவும் பி. ப. 3-30 வரை எந்த வித மேலதிக ஊதியமுமின்றித் தங்கள் லீவு நாட்களையும் நாள் முழுவதும் செலவு செய்யவேண்டுமென்று பணிப்பாளர் எண்ணினாரா? அவர் அப்படி எண்ணியிருந்தாலும் பரவாயில்லை. சனிக்கிழமை அரை நாள் பாடமாகிய 'தொழிற்கல்வி'யை வைத்திருக்கலாம். முழு நாளாகிய 3-12-81 வியாழக்கிழமை விஞ்ஞான பாடத்தை வைத்திருக்கலாம். பரீட்சைகள் 23-11-81க்குப் பின்தான் தொடங்கவிருப்பதால் கல்விப்பணிப்பாளர் மனமிரங்கி இந்த மாற்றத்தைச் செய்து தருவாரா?

(2) தொண்டமானாறு விஞ்ஞான வெளிக்கள நிலையம் நடாத்தும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் ஒவ்வொருதவணையும் மிக ஒழுங்கீனமாக நடைபெறுகிறது. பரீட்சை நடைபெறும் தினத்துக்கு ஒரு வாரத்துக்கு முன்பே பரீட்சைக்கு வரவிருக்கும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குரிய பரீட்சை வினாக்கள் ரியூட்டறிகளில் கல்வியிலும் மாணவர்களுக்கு ஞேனியோபண்ணி விற்கப்படுகிறது. இதனால் ரியூட்டறிகள் பெருந்தொகையான பணத்தைச் சம்பாதிக்கிறார்கள். உலகில் விசாரணைகள் செய்தபோது ''தொண்டமானாறு விஞ்ஞான வெளிக்கள நிலைய (F.W.C) உத்தியோகத்தர்கள் ரியூட்டறிப் பொறுப்பாளர்களுக்குக் கணிதம் - விஞ்ஞானப் பரீட்சை வினாக்களை விற்றுவருவதாக அறியப்பட்டது. இது ரியூட்டறிகள் தங்கள் வியாபாரத்தைப் பெருக்கவும், மாணவர்களை நாசப்படுத்தவுமே வழிவகுக்கிறது. ரியூட்டறிகள் இவ்வாறு செய்வதால மாணவர்கள் பரீட்சைக்கு முதல் இரு வாரங்கள் வரை பாடசாலைகளைப் பகிஷ்கரித்து ரியூட்டறிகளுக்கே குவிகிறார்கள் கல்விப்பணிப்பாளர் இதைக்கவனித்து ஆவன செய்யவேண்டும்.

பணிப்பாளரின் சுற்று நிருபத்தில 'முக்கிய குறிப்பு' என்ற இடப்பட்டதைக் கவனிக்கவும். ''பரீட்சை எடுத்து முடித்த மாணவர்களை'' மற்றப் பரீட்சை நடந்து கொண்டிருக்கும்போது வகுப்புக்களில் வைத்து ஒழுங்காயிருக்கச் செய்வதாம். இது முடியுமா? எத்தனையோ பாடசாலைகளில் இடவசதியில்லை, போதிய தளபாடங்கள் இல்லை, ஆசிரியர் பற்றுக்குறையுண்டு. இந்த நிலையில் பரீட்சை மண்டபங்களுக்கும் இடம் கொடுத்துப் பரீட்சைவிதிகளின்படி பாடங்கள் நடத்தவும் வேணும் தளபாடங்களும் பரீட்சைக்குச் சீராகவேணும். ஆசிரியர்களும் மேற்பார்வை செய்ய வேண்டும் இது சாத்தியமாகுமா?

எனவே கல்விப்பணிப்பாளர் இக்குறைகளை நிவர்த்தி செய்து உதவவேண்டும்.

ரி. குழந்தைவேல்
குற சற் தம்பையா ஒழுங்கை,
யாழ்ப்பாணம்'

# இன்று உபகுழு கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவான் நயினாதீவு பயணப்படகுச் சேவை உபகுழுக் கூட்டம் இன்று வியாழன் பிற்பகல் யாழ். மாவட்டச்செயலாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்குழு உறுப்பினர்களாக யாழ். மாவட்ட செயலாளரும் யாழ். அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா, யாழ் அ.ச.உறுப்பினர்கள் திரு. மு. தம்பிமுத்து, திரு. க. சோமசுந்தரம், வேலணை உதவி அ. அதிபர் திரு ஏ. குணநாயகம், திரு. த. சிவராசசிங்கம் ஆகியோரும் செயலாளராக யாழ். மாவட்ட அ. ச. உப செயலாளர் திரு பொ. பாலசிங்கமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்கூட்டத்துக்குத் துணைக்குழு உறுப்பினராக பெருந்தெருக்கள் திணைக்களப் பிரதம பொறியியளாளர் திரு. எஸ். பாலேந்திரா, யாழ். அலுவலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சுப்பிரமணியம், ஊர்காவற்றுறை உ. அ. அ. எஸ், பாலரத்தினம், நெடுந்தீவு உ. அ. அ. திரு. எ, மகாலிங்கம் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புங்குடுதீவு, குறிகாட்டுவானுக்கும் நயினாதீவுக்கும் இடையில் நடைபெறும், பிரயாணிகள் பயணச்சேவை சீராக நடைபெறும்க் போட்டிகளுக்குப் பூசல்களுக்கும் இடமளிப்பதால் அப்பயணச்சேவையைத் திறமையாகவும் சிறப்பாகவும் நடாத்துவதற்காகவே இக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. (மா)

# "கூட்டணியுடன் பலாத்காரத்தை இணைப்பது துவேஷத்தையே கிளப்பும்!"

## பாராளுமன்றத்தில் 'நவம்'

(கொழும்பு)

"ஒரு நாட்டின் பொருளாதாரம் முன்னேற வேண்டுமானால் அந்த நாட்டில் அமைதி, ஒழுங்கான ஆட்சி தேவை என்பதை நாம் அனைவரும் ஏற்கின்றோம். இரு இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஓர் இனத்தின் அடிப்படைப் பிரச்சினையை தீர்க்கமுடியாத நிலை ஏற்படின் அங்கு குழப்பங்களே ஏற்பட்டு, அந்நாடு முன்னேற முடியாத நிலை உருவானதையும் பல நாடுகளில் நாம் கண்டுள்ளோம். எனவே ஒவ்வோரினமும் திருப்தியுடனும், நம்பிக்கையுடனும், சமமரியாதையுடனும் வாழும் சூழலை ஏற்படுத்துவது சகலரதும் கடமையாகும். பலாத்காரத்துக்கும் கூட்டணிக்கும் தொடர்புண்டு என்று பொறுப்பற்ற விதத்தில் சிலர் இணைத்துப் பேசுவது துவேஷத்தையே ஏற்படுத்துகிறது. பலாத்காரம் எமது முன்னேற்றத்துக்கு தடையாகவே இருக்கும்"

இவ்வாறு வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் சாவகச்சேரி எம்.பி திரு வி. என். நவரத்தினம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

### நேரு கூறிய பதில்

இந்நாட்டில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நல்லமுறையில் புரிந்து கொள்ளமுடியாத நிலையில் முடிந்த விதத்திலெல்லாம் பேசி மேலும் குழப்பத்தை இலர் ஏற்படுத்துவது வேதனை அளிப்பதாகும். பல்வேறு நாடுகளிலும் இத்தகைய பிரச்சினைகளின்போது எப்படி இன ஒற்றுமையை ஏற்படுத்த முயற்சித்தனர்; என்ன நடவடிக்கைகளை எடுத்தனர் என்பதை அறிய நீண்டகால சரித்திரம் எதனையும் ஆராய வேண்டியதில்லை சில நாடுகளில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுமிருக்கிறது. சில நாடுகளில் தீர்வு காணப்படாமலுமிருக்கிறது. நீ எப்படி இந்திய உபகண்டத்தை ஒற்றுமையாக வைத்திருக்கிறாய்? என்று நேருவிடம் கேட்டார்கள். "இந்திய உபகண்டத்தில் வெவ்வேறு இனங்கள் வாழ்கின்றன. அவை ஒவ்வொன்றினதும் தனித்துவத்தை மதித்து, அவை கௌரவமாக வாழும் சூழலை நான் ஏற்படுத்தியதாலேயே" என்று நேரு அதற்குப் பதில் கூறினார்.

### மக்கள் அளித்த அங்கீகாரம்

செல்வா செலவாக்கியாகின் இனதுவேஷத்தைகிளப்பியல்ல இப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது தத்துவ ரீதியாக ராஜதுரோகம் என்று கண்டித்த சித்திரவதை செய்யப்பட்டார்கள். சிறையிலிருந்து அழைக்கப்பட்டு அவனையே ஜனாதிபதியாக ஏற்று செக்நாடு இன்று ஆளப்படுகிறது. சிங்கப்பூர் போன்ற நாடுகளிலும் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டிருக்கிறது ஒரு பிரச்சினையைத் தீர்க்கும் போது சில தத்துவங்களை உணர்ந்து செயல்பட வேண்டும் என்பதை பொறுப்புணர்வுடன் நான் இங்கு கூறுகிறேன் சென்றகால நிகழ்ச்சிகளை ஆராய்ந்து ஒரு தத்துவத்தை மக்கள் முன்வைத்து அதற்கு மக்களின் அங்கீகாரத்தை நாம் பெற்றோம் அந்த நிலையிலிருந்துள்ளகட்டத்திலும் அணுவளவும் நாம் விலகவில்லை ஜனநாயக ரீதியாக ஜனநாயக அம்சங்களை மட்டுமே பாவித்து அக்குறிக்கோளை அடைய முயற்சி எடுப்போமே தவிர, பலாத்காரம் இனவெறிமூலம் நாம் முயற்சி எடுத்ததுமில்லை. எடுக்கப்போவதுமில்லை என்பதை தெளிவாகக் கூறி வைக்கிறேன்.

### கற்பனைக்கருத்துகள்

"சிலர் தமது கற்பனைகளில் ஏற்பட்ட கருத்துக்களை சில கமிஷன்களின் முன் சாட்சியமாக அளித்தாலும் தந்தை செல்வநாயகம் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஆகியோர் குறிப்பாக தந்தை செல்வநாயகம் ஆரம்பம் முதல் மரணம் வரை வலியுறுத்தியதை அதாவது ஆட்சிமுறையை அரசின் அதிகாரத்தை அன்றி, சிங்கள மக்களை பௌத்தத்தை நாம் எதிர்க்கவில்லை என்பதை நாம் ஒருபோதும் மறப்பவர்கள் அல்லர். என்று அவரது நிழலிலிருந்து அரசியல் கற்க ஆரம்பித்தோமோ அன்று முதல் அவரின் இந்த சித்தாந்தத்தை மீறிச் செயல்படும் எந்தப் பொறுப்பான தலைவரும் எமது இயக்கத்தில் இல்லை.

### 'ஜனாதிபதி பதவியை மதிக்கின்றோம்'

"தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே கொள்கைகளில் முரண்பாடு இருக்கலாம். ஆனால் சிங்கள தமிழ் மக்களிடையே துவேஷம் ஏற்படுத்தவேண்டுமென்பது எமது எண்ணமல்ல ஜனநாயக ரீதியாக ஒருகுறித்த கொள்கையில் இச்சபையில் அங்கம்வகிக்கும் கூட்டணி செயல்படுவதற்கு ஜனாதிபதி ஒருபோதும் தடையாக இருக்கவில்லை. ஒரு சிலரின் விஷமத்தனமான தூண்டுதல்களால் நாட்டிலசில குழப்பங்கள் ஏற்படும்போது நாம் இருசாராரும் எமது ஒத்துழைப்பை அவைத் தணிப்பதில் அளிக்கிறோம் ஜனாதிபதி பதவியை நாம் மதிக்கிறோம். நாம் கற்பனை உலகில் வாழவில்லை. சித்தாந்த அரசியல் நடத்துபவர்கள் அல்லர் நாம். பொறுப்பான பதவியிலுள்ள ஒருவரின் அழைப்புக்கு செவி சாய்க்கவேண்டியது ஒரு பொறுப்புவாய்ந்த அரசியல் கட்சித் தலைவரின் கடமை. அதையே எமது தலைவர் புரிகின்றார். வேறு விடயங்கள் பற்றி பேசுவதாக யாராவது கூறின் அது தவறானது எமது நெஞ்சில் எவ்வித குழப்பமும் இல்லை எக்கட்டத்திலும் எமது சிந்தனை தெளிவாகவேஉள்ளது. அதனை ஜனநாயக ரீதியில் செய்துமுடிப்போம் என்பதை மீண்டுமொருமுறை கூறிவைக்கிறேன்.

### பலாத்காரத்தை ஆதரிக்கவில்லை

பயங்கரவாதம்பற்றி ஒருசிலர் குறிப்பாக ஓர் அமைச்சர் இங்கு பலவாறாக பேசுகிறார். பலாத்காரம் எந்தவகையில் ஏற்பட்டாலும் அதை நாம் ஆதரிப்பவர் அல்லர். நாம் இதை தெளிவாகவே கூறியுள்ளோம் பலாத்காரம் எமது முன்னேற்றத்துக்கு ஓர் அணுவளவாவது கூட இட்டுச் செல்லமாட்டாது; அது தடையாகவே இருக்கும்.

எனவே அரசியல் நோக்கோடு சிலர் ஈடுபட்டால், தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் தமிழ் மக்களுக்கும் அதில் தொடர்பு என்று பொறுப்பற்ற விதத்தில் சிலர் பேசுவது துவேசத்தையே ஏற்படுத்துகிறது. (ம)

---

## தாக்கப்பட்டதாகப் புகார் செய்தநபருக்குப் பிணை

(மாவிட்டபுரம்)

இராணுவத்தினரால் தாக்கப்பட்டதாக நீதிமன்றத்தில் புகார்தெரிவித்து சட்டவைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட நபர் மல்லாகம் நீதிபதியால் 500ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பலாலி, மயிலிட்டிப் பகுதிகளில் கடைகளைத்தாக்கி, வீதியால் சென்றவர்களுடன் சண்டைக்கு சென்று கலாட்டா செய்தது தொடர்பாக இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு காங்கேசன்துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்ட எஸ். இராஜரத்தினம் என்னும் நபர் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில ஆஜர்செய்யப்பட்டிருந்தார்.

தாம் இராணுவத்தினரால் கடுமையாக தாக்கப்பட்டதாக அவர் புகார் தெரிவித்ததன் பேரில் நீதிபதி அவரை சட்ட வைத்திய பரிசோதனைக்குட்படுத்துமாறு உத்தரவிட்டு ரிமாண்டில் வைக்கும்படியும் பணித்திருந்தார்.

இந் நபர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் சட்டவைத்திய பரிசோதனை நடபெற்றதாகவும் அதன் வைத்திய அறிக்கை கிடைக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டது.

நீதிபதி இந்நபரை 500ரூபா சரீரப்பிணையில் செல்ல அனுமதித்தார், இந்நபருடன் சேர்ந்து கலாட்டா செய்தார்கள் என்ற சந்தேகத்தில் தேடப்பட்டுவந்த அ. தேவதாசன் அ. அந்தோனிப்பிள்ளை ஆகிய நபர்களும் மல்லாகம் நீதிமன்றத்தில சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் மூலம் சரண் புகுந்தனர் இவர்களையும் தலா 500 ரூபா சரீரப்பிணையில் செல்ல மல்லாகம் நீதிபதி திரு சி. ஆர். இராஜசிங்கம் அனுமதித்தார்.

---

## பொலிஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைப்புகளை புதைத்து வைத்திருந்த வீட்டுக்காரர்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டனர் இது தொடர்பாக மேலும் பலர் விசாரணை செய்யப்பட்டனர். ஆனால் அவர்களையெல்லாம் விடுத்த இம் மூவரை மட்டும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்வதற்குக் காரணம் என்ன என்று அவர் கேள்வி எழுப்பினார்.

நீதிபதி சி. ஆர். இராஜசிங்கம் இதுபற்றிக் காங்கேசன்துறைப் பொலிஸ் சார்ஜண்ட் தியாகராஜாவிடம்கேட்க யாழ் பொலிசாரே இதுபற்றி விசாரணை செய்தமையால் தமக்கு முழுவிபரமும் தெரியாதெனக் கூறினார்.

இதையடுத்து நீதிபதி 3நபர்களையும் இன்று 19ம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறும், யாழ். பொலிசாரை இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி விசாரணை விபரங்களை தெரிவிக்குமாறும் அல்லது பதிவேடுகளை அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார். (அ)

---

## சமூகசேவகர் மூசாஜி மறைவு

(கொழும்பு)

பிரபல சமூக சேவையாளரான ஜனாப் எஸ் எச் மூசாஜி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

ஜனாப் மூசாஜி, இன, மத பேதமின்றி பல தொண்டுகளைச் செய்துள்ளார். கொழும்பு நகரிலுள்ள வாலி வொல்றில் பௌத்தஆலயமொன்றையும், திருக்கேதீஸ்வர ஆலயத்தில் மண்டபமொன்றையும், மற்றும் திருப்பதியில் யாத்திரிகர்கள் தங்கு மடமொன்றையும், அமைத்துக் கொடுத்துள்ளார்

தனது 79 வயதில் காலமான ஜனாப் மூசாஜி, கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. கி

---

## கூட்டணி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக் கொண்டனர்.

இது பற்றித் தெரிவித்த பாராளுமன்ற அதிகாரி யொருவர், தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்கள் பகிஷ்கரிப்பின் மூலம், ஒவ்வொருவரும் 9,000 ரூபாவுக்கும் சற்று அதிகமான தொகையினை இழந்துள்ளதாகத் தெரிவித்தார்.

ஒரு உறுப்பினர் பாராளுமன்ற கூட்டமொன்றில் கலந்து கொள்ளும் பட்சத்தில் 200 ரூபாவவை அலவன்சாகப் பெறுகின்றார். இவ்வகையில் கூட்டணி எம். பிக்கள் மாதாந்த அலவன்சாக 1000 ரூபாவை மட்டுமே பெற்றுக் கொண்டனர். இ

---



## மரண அறிவித்தல்

### மா. பொன்னம்பலம்

ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தரும் (C/A) வசந்தா சேலை அச்சகத்தின் அதிபருமாகிய மா. பொன்னம்பலம் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற உடையார் மாணிக்கவாசகர், திருமதி பொன்னம்மா மாணிக்கவாசகர் அவர்களின் அன்பு மகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி குமுதினி சிவசுப்பிரமணியம், திருமதி காயத்திரி சேனாதிராஜா அவர்களின் அன்புத் தந்தையும், திருமதி அன்னபூரணி தியாகராசா, ஓய்வு பெற்ற கிராமசேவையாளர் மா. கந்தையா ஆகியோரின் சகோதரரும், மயூரா, சங்கர் குறமகள், சிவா, வேல்விழி, கீதா, கிஷோர் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற திரு. திருமதி அச்சலிங்கம் அவர்களின் அன்பு மருமகனுமாவார்.

அவரின் இறுதிக் கிரிகைகள் 18-11-81 புதன்கிழமை மாலை நடைபெற்றது.

—உடையார் வளவு—
மறவன்புலவு

1489



---

## பொதுசனத் தொடர்பு அதிகாரி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் பிரதிச் செயலாளர் திரு பொன் பாலசிங்கம் அபிவிருத்திசபையின் பொதுசனத் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் சுன்னாகம் பட்டின சபையில் விசேஷ ஆணையாளராகக் கடமையாற்றியவர்.

---



## மரண அறிவித்தல்

### டாக்டர்மு. ஞானசுந்தரம் (ஆர். எம் பி)

(சாந்தி கிளினிக், சாவகச்சேரி)

ஞானசுந்தரம் (ஆர். எம். பி) அவர்கள் காலமானார். இவர் ராணி பவளகாந்தியின் அன்புக்கணவரும், தர்ஷினி, சாந்தினி ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், கோபாலசுந்தரம், நாகேஸ்வரி, புவனேஸ்வரி, சங்கேஸ்வரி, சிவசுந்தரம், விமலேஸ்வரி, மகேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும், டாக்டர் மயில்வாகனம், ராசாத்தி பரிமள காந்தி, இந்திராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பிள்ளையார் கோவிலடி, பிரதான வீதி, பருத்தித்துறையில் 19ம் திகதி வியாழக்கிழமையன்று பிற்பகல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். 1499



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சென்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 303-ம் இலக்கத்திலுள்ள சாந்தியை அச்சகத்தில் 1981 ம் ஆண் நவம்பர் 19-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper, The General P. O. Sri Lanka Regd.O. P. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி 7707, 889. 8166.